வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 27.02.2026 வெள்ளிக்கிழமை | இதழ் : 53 | பக்கங்கள் : 08

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு இடையூறு விளைவிக்கவேண்டாம்!

## கத்தோலிக்க திருச்சபை கோரிக்கை

கொழும்பு, பெப்ரவரி. 27

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக தற்போது முன் னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு எவரும் முட்டுக்கட்டை போடவோ அல்லது இடையூறு விளைவிக்கவோ வேண்டாம் என கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்று வியாழக்கிழமை நடை பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இந்த பயங்கரவாத தாக்குதலில் 300 இற்கும் மேற்பட்ட உயிர்கள் பலியாகின. உயிரிழந்தவர்களில் அனைத்து மதத்தவர்களும், அனை த்து இனத்தவர்களும் அடங்குவர். இது ஒரு திட்டமிட்ட மனிதப்படு கொலை. இந்தத் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையை கண்டறிவது என்பது, இந்த நாட் டில் சட்டம் சரியாகச் செயற்படு கின்றது என்பதை உறுதிப்படுத்தும் ஒரு விடயமாகும். அவ்வாறு உண்மை கண்டறியப்படாவிட் டால், குற்றவாளிகள் தண்டனையி லிருந்து தப்பிக்க முடியும் என்ற அச்சமற்ற நிலை உருவாகும்.

புலனாய்வுப் பிரிவு முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலேயின் கைது மற்றும் தற்போதைய விசார ணைகளுக்கு பல்வேறு தரப்பினர் தமக்குச் சாதகமான வியாக்கியானங் களை அளித்து வருகின்றனர்.

இவர்களின் பின்னணி யில் உள்ள நோக்கம் என்ன என்பது தெளிவாகத்

07

# டித்வா புயல் நிவாரணப் பணிகளை அதிகாரிகள் துரிதப்படுத்தவேண்டும்!

## ஜனாதிபதி செயலாளர் அறிவுறுத்தல்



கொழும்பு, பெப். 27

டித்வா சூறாவளியினால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகளை மிகவும் திறமையாகவும் ஒருங்கிணைந்த ரீதியிலும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலா நிதி நந்திக சனத் குமாநாயக்க அதி காரிகளுக்குப் பணிப்புரை விடுத் துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின் 16 ஆவது அமர்வின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடை பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் தனித்தனியாகச் செயல்படாமல், ஒரு கட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் விரைவான பலனைப் பெற முடியும் எனச் செய லாளர் சுட்டிக்காட்டினார்.

அனர்த்தத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கும், ஆபத்தான பகுதிகளில் வசிப்பவர்களுக்கும் புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்காகப் பொருத்தமான

07

# இலங்கையின் மனித உரிமைகள் நிலையை ஆராயும் பக்க நிகழ்வு இன்று ஜெனிவாவில்!

ஜெனிவா, பெப். 27

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61ஆவது கூட்டத் தொடர் கடந்த திங்கட் கிழமை ஆரம்பமாகியு ள்ள நிலையில், அதன் ஒரு அங்கமாக இலங்கை யின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்த விசேட கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளது.

இம்முறை கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான உத்தியோக பூர்வ அறிக்கைகளோ அல்லது விவாதங்களோ இடம்பெறாத நிலையில், பிரான்ஸைத் தளமாகக் கொண்டியங்கும் அரச சார்பற்ற அமைப்பினால் இந்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நடை பெற்ற 60ஆவது கூட்டத் தொடரின்போது, "இலங்கையில்

07

# எந்தவொரு பயங்கரவாத சட்டமும் இனிமேல் நாட்டில் தேவையில்லை

## சாவகச்சேரி நகர சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 27

ஜனநாயகத்திற்கு விரோதமாகவும், அடிப்படை மனித உரிமைகளைக் கேள்விக்குள்ளாக்கும் வகையி லும் தற்போதும் வலுவிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத் தின் கோர முகத்தை நேரடியாக அனுபவித்த மக்கள் என்ற அடிப்படையில் முன்மொழிப்பட்டுள்ள பயங்க ரவாத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவை மீளப் பெறவும், பயங்கரவாதத் தடைச் சட்டத் தினை நீக்கவும், எந்தவொரு

07

# இடர் நிவாரண அதிகாரிகள் இன்று முதல் போராட்டம்!

கொழும்பு, பெப். 27

அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரச சேவை அதிகாரிக ளின் பல தொழிற்சங்கங் கள் இன்று முதல் அப்பணிகளிலி ருந்து விலகி

07

# கச்சதீவு அந்தோனியார் திருவிழா இன்று ஆரம்பம் யாழிலிருந்து இன்று அதிகாலை முதல் பஸ் சேவை

## குறிகாட்டுவானிலிருந்து படகு சேவைகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 27

கச்சதீவு புனித அந் தோனியார் யாத்திரை தல திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மற்றும் நாளை சனிக்கிழமை ஆகிய இரு நாட்களும் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக் கிழமை மாலை நற்க ருணை ஆராதனையும், மாலை வழிபாடுகளும் நடைபெறும். நாளை சனிக்கிழமை காலை திரு நாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

கச்சதீவு யாத்திரைக் காகச் செல்ல இருக்கின்ற யாத்திரிகர்களுக்கான பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

அதன் பிரகா ரம் இன்று

07

# போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்க அர்ப்பணிப்புடன் செயற்படும் பொலிஸ்!

## பொது பாதுகாப்பு அமைச்சர் பாராட்டு

கொழும்பு, பெப். 27

குற்றங்களைக் கட்டுப் படுத்துவதற்கும், நாடு முழுவதும் பரவி வரும் போதைப்பொருள் அச்சு றுத்தலை ஒழிப்பதற்கும் பொலிஸ் திணைக்களம் அர்ப்பணிப்புடன் செயற் பட்டு வருவதாக பொது மக்கள் பாதுகாப்பு மற் றும் பாராளுமன்ற விவ கார அமைச்சர் அனந்த விஜேபால தெரிவித்துள் ளார்.

மீரிகம பொலிஸ் நிலையத்தின் புதிய கட்ட டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு கருத்து தெரி வித்தபோதே அவர் இதனைத்

07

# யாழ்.பல்கலை துணைவேந்தராக சிரேஷ்ட பேராசிரியர் வேல்நம்பி!



யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாணப் பல்க லைக்கழக புதிய துணை வேந்தராக, சிரேஷ்ட பேரா சிரியர் திருநாவுக்கரசு வேல் நம்பி நியமிக்கப்பட்டுள்ளார்.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியாக செயற்பட்டு வரும் அவர் எதிர்வரும்

07

# ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கியுள்ளது அநுர அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 27

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட் சிக்கு வந்த ஓராண்டு காலத்திற்குள் மூன்று பிரதான ஊழல்களில் சிக்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின் போதே அவர் இந்த குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

07

# 293 குடும்பங்களின் பூர்வீகக் காணிகளை வர்த்தமானி மூலம் சுவீகரித்த வன இலாகா!

## ஒருங்கிணைப்புக் குழுவில் சுட்டிக்காட்டு

வவுனியா, பெப். 27

செட்டிகுளம் பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட வீரமாணிக்கங்குளம் மற்றும் முகல்குத்திக்குளம் ஆகிய பகுதிகளில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த 293 குடும்பங்க ளின் காணிகள் 2024 இல் வர்த்தமானி அறிவிப்பு செய் யப்பட்டு வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத் தப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட் டது.

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக யாழில் சனியன்று மாபெரும் போராட்டம்!

## வடக்கு ஆளுநர் அலுவலகம் வரை பேரணி

யாழ்ப்பாணம், பெப். 27

"பழசும் வேண்டாம், புதுசும் வேண்டாம்" எனும் தொனிப்பொருளில், பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரி நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் மாபெரும் போராட்ட மொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

தாயகச் செயலணியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இப்போராட்டம், அன்றைய தினம் காலை யாழ். பொது நூலகத்திற்கு முன்பாக ஆரம்பமாகவுள்ளது. அங்கிருந்து பேரணியாகச் செல்லும் போராட்டக்காரர்கள், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தை சென்றடைந்து தமது கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளனர்.

நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, தாயகச் செயலணியின் பிரதிநிதிகள் இப்போராட்டம் குறித்த விவரங்களை வெளியிட்டனர்.

இதன்போது, கட்சி பேதங்களைக் கடந்து அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரையும் இப்போராட்டத்தில் கைகோர்க்குமாறு அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

ஊடகச் சந்திப்பில் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:- தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தினால் தமிழ் மக்கள் நீண்ட காலமாகப் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். இச்சட்டத்தை நீக்குவதாக வாக்குறுதியளித்தே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால், பழைய சட்டத்தை நீக்குவதற்குப் பதிலாக, அதற்கு மாற்றாகப் புதியதொரு சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்கிறது.

எம்மைப் பொறுத்தவரை இச்சட்டம் பழையதோ அல்லது புதியதோ, அதன் வடிவம் எதுவாக இருந்தாலும் அது தேவையற்றது.

மக்களைப் பாதிக்கும் இத்தகைய கொடிய சட்டங்கள் முற்றாக ஒழிக்கப் பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அரசின் புதிய சட்ட முயற்சியைக் கண்டித்தும், நீதியை வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.- என்றனர். (அ)

# இலங்கைத் தமிழ் அகதிகளின் நலனைப் பேணுவதில் உறுதி!

## தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை, பெப். 27

தமிழகத்தில் வசிக்கும், இலங்கைத் தமிழ் ஏதிலிகளின் நலனைப் பேணுவதில் தமிழக அரசு உறுதியுடன் இருப்பதாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமது, எக்ஸ் சமூக வலைத் தளப் பக்கத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கைத் தமிழர்களுக்காக, தமிழக அரசின் குரல் தொடர்ந்து ஒலிக்கும் என்றும் அவர் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழக முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழ் ஏதிலிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுடன் கூடிய, நிரந்தரக் குடியிருப்புகளை தமிழக அரசு தொடர்ந்தும் வழங்கி வருகிறது. குடியிருப்புகள் வழங்குவதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கான அடிப்படை வசதிகளையும் வழங்குவதற்கு தமிழக அரசு தொடர்ந்து போராடும் என்றும் முதலமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், இலங்கைத் தமிழர்களின் கண்ணியமான வாழ்வை உறுதி செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம் என்றும் முதலமைச் சர் மு.கா.ஸ்டாலின் அந்த பதி வில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மருதங்கேணி பொலிஸ் நிலைய அணி வகுப்பும் பரிசோதனையும்



யாழ்ப்பாணம், பெப். 27

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2026 ஆண்டிற்கான அணிவகுப்பு மரியாதையும் பரிசோதனையும் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கெலும் பண்டார தலைமையில் காலை 7.30 மணியளவில் பொலிஸ் நிலைய வளாகத்தில் ஆரம்பமான நிகழ்வில் காங்கேசன்துறை பொலீஸ் அத்தியட்சகர் பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக் கொண்டார்.

பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவைப்பிரிவு நிலையங்கள், சுற்றுச்சூழல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகள், அலுவலகங்கள் என்பவற்றை பார்வையிட்டதுடன் பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் சுகாதார முறைகள், பொலிஸ் நிலையத்திலுள்ள பௌதீக வள பற்றாக்குறை தொடர்பிலும் அவர் ஆராய்ந்தார். (அ)

# சிட்னியில் இன்று 6 நூல்கள் வெளியீடு

சிட்னி, பெப். 27

அவுஸ்திரேலியா, சிட்னி மாநகரில் ஜங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் இன்று வெள்ளிக்கிழமை வெளியிடப் பட உள்ளன.

"தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்", "இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்", "ஆபிரிக்க தேசிய இனங்களும் சுயநிர்ணய விடுதலையும்", "முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்"" தென்கிழக்காசிய விடுதலைப் போராட்டங்கள்", "இந்தியாவில் தேசிய இன எழுச்சியும் வீழ்ச்சியும்" ஆகிய ஜங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்களின் வெளியீடே இன்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெற உள்ளது.

பெமுள்வே சமூக மண்டபம் **(Allan G Ezzy Community Centre>(Near Woolworths)** *1 நேறிழசவ ளுவ, ªநஅரடறரல, ளேறு 2145.* எனும் முகவரியில் உள்ள மண்டபத்தில் மாலை **6.30** முதல் இரவு **9.00** மணி வரை இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வு மூத்த எழுத்தாளர் மாத்தளை சோமு தலைமையில் நடைபெற உள்ளது.

சிட்னி மாநகரில் நிகழும் இந்நூல் வெளியீட்டின் ஏற்புரையை நூலாசிரியர் ஜங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார். (அ)

# தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் கண்காட்சி



யாழ்ப்பாணம், பெப். 26

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்திய கண்காட்சி நேற்று முன்தினம் புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் எவ்.சி. சத்தியசோதி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி பா. ஜனனியும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி நிருபராஜ் லாகினி, சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் பொன்னையா குகதாசன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேத்திரா சுதாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஆடை வடிவமைத்தல் மற்றும் அழகுக் கலை, மனைப்பொருளியல் போன்ற பிரிவுகள் இடம் பெற்றுள்ளன. (அ-02)

# நல்லகண்ணுவின் புகழுடலுக்கு சிறீதரன் நேரில் சென்று அஞ்சலி



சென்னை, பெப். 27

"ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகத் தனது வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்தவர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் இரா. நல்லகண்ணுவின் புகழுடலுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் சென்று புகழஞ்சலி செலுத்தினார்.

எளிமை, நேர்மை, சமூக நீதி, சமத்துவம் ஆகிய உயரிய மதிப்புகளின் உருவாக வாழ்ந்த அவர், தலைமுறைகள் கடந்தும் வழிகாட்டும் ஒளியாக நிலைத்திருப்பார். அவரது மறைவு அரசியல் உலகிற்கும், சமூக நீதிக்காகப் போராடும் மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் எனவும் சிறீதரன் தெரிவித்துள்ளார். (அ)

# டித்வா புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு காசோலைகள்

கிளிநொச்சி, பெப். 27

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வும் பிரஜா சக்தி உறுப்பினர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

கண்டாவளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பிரஜா சக்தி உறுப்பினர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து உத்தியோகத்தர்களுக்கான கடிதங்களும் அதனை அடுத்து டித்வா புயலால் பாதிக்கப்பட்டு வீடுகள் சேதமடைந்த குடும்பங்களுக்கான உதவித்தொகை வங்கிகளில் வைப்பிலிடப்பட்ட வங்கிப் புத்தகங்களும் கையளிக்கப்பட்டன

நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர், பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.02.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 15

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தமிழர்கள் அரசுக்கு நெருக்குதல் கொடுக்க உடனடி மார்க்கம் என்ன?

அண்மையில் புதுடில்லிக்கு சென்றிருந்த ஜனதா விமுக்தி பெரமுன(ஜே.வி.பி.) யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா நாடுதிரும்பி வழங்கிய நேர்காணல்களில் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் நடைமுறைப் படுத்தல் தொடர்பாகவோ அதிகாரப்பரவலாக்கம் போன்ற பிரச்சினைகள் குறித்தோ இந்தியத் தரப்பினர் தனது தன்னுடன் பேசவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து யாழ்ப்பாண ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அந்த விவகாரங்கள் குறித்து பேசப்பட்டதா இல்லையா என்பது குறித்து இந்தியத் தரப்பில் இருந்து எதுவும் கூறப்படவில்லை என்று கூறியிருந்தார். ரில்வின் சில்வாவுடன் இனப்பிரச்சினை குறித்து இந்திய அதிகாரிகள் பேசாமல் விட்டிருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை அவரின் கருத்தில் இழையோடியிருந்தது.

இந்தியாவின் தலையீட்டையடுத்து மாகாணசபைகளை அமைப்பதற்காக அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட காரணத்தினால் மாத்திரமே இன்றுவரை அது நிலைத்து நிற்கிறது. அத்தகைய தலையீடு இல்லாமல் இலங்கையில் அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாடு ஒன்று ஒருபோதும் வந்திருக்காது என்பது எல்லோருக்கும் தெரியும்.

இலங்கையின் எந்த அரசாங்கமும் 13 ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு இந்தியா அனுமதிக்காது என்ற நம்பிக்கை தமிழர்களிடம் தாராளமாக இருக்கிறது. மாகாணசபைகளில் ஒன்றுமே இல்லை என்று. கூறுபவர்களிடம் கூட இந்த நம்பிக்கை உள்ளூார இருக்கிறது.

ரில்வினுடன் 13 ஆவது திருத்தம், அதிகாரப் பரவலாக்கம் குறித்து இந்திய தரப்பு பேசியதோ இல்லையோ அது ஒருபுறமிருக்க, அவ்வாறு பேசவேண்டும் என்று தனக்கு ஒரு கடப்பாடு இருக்கிறது என்று இந்தியா உணரக் கூடியதாக இலங்கைத் தமிழர் அரசியல் சமுதாயத்தின் நிலைப்பாடுகளும் செயற்பாடுகளும் அமைந்திருக்கின்றனவா என்ற கேள்வி முக்கியமானது.

இந்திய தலைவர்கள் கொழும்பு வரும்போது மாகாணசபை தேர்தல்களை நடத்தி 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்குமாறு அவர்களிடம் கேட்பதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் தவறுவதில்லை. 13 ஆவது திருத்தம் குறித்து இந்தியா பேசாமல் விட்டால் தனக்கு பெரும் சந்தோசம் என்று ஒரு தடவை சமூக ஊடகத்தில் கூறிய அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமாரும் கூட இறுதியாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர். இறுதியாக கொழும்பு வந்திருந்த போது மற்றைய தமிழ்த் தலைவர்களுடன் சேர்ந்து மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டியது அவசியம் என்று கூறினார். அதற்கு பிறகு மாகாணசபைகள் குறித்து எமது தமிழ்க் கட்சிகள் பேசுவதானால் இந்திய இராஜதந்திரி ஒருவர் இலங்கை வரவேண்டும்.

மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்க மக்கள் இயக்கம் ஒன்றை முன்னெடுக்கப் போவதாக தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் கடந்த வருட பிற்பகுதியில் அறிவித்தார். டித்வா சூறாவளியில் அவரின் அந்த அறிவிப்பும் அடிபட்டுப் போய்விட்டது போன்று தெரிகிறது.

பிரேமச்சந்திரனின் முன்னெடுப்பில் மாகாணசபைகளை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து விளக்கமளிக்க சில கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இப்போது அதையும் காணவில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் தமிழர்கள் நெருக்குதலைக் கொடுப்பதற்கு உடனடியாக கைவசம் இருப்பது மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் மாத்திரமே என்பதை புரிந்துகொள்ளாமல் தமிழ்க் கட்சிகள் எடுக்கும் எந்த நிலைப்பாட்டினாலும் எந்தப் பிரயோசனமும் இப்போதைக்கு இல்லை. தேர்தல்களை நடத்துமாறு கோரி ஜனநாயக ரீதியான மக்கள் இயக்கம் ஒன்றை வடக்கு, கிழக்கில் முன்னெடுத்தால் இந்தியாவும் கூட கொழும்புடன் அது குறித்து பேச வேண்டிய தேவையை உணரும் நிலை ஏற்படலாம்.

# சுரேஷ் சாலேவின் கைது உள்நோக்கம் கொண்டது

## திலித் ஜயவீர எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27

முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டு 72 மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை, சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர வன்மையாக கண்டித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் போர்வையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தனது எக்ஸ் கணக்கில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுரேஷ் சாலே இலங்கையில் மூன்று தசாப்த கால கொடிய பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய ஒரு சிறந்த மற்றும் திறமையான இராணுவ அதிகாரி ஆவார்.

இவ்வாறானதொரு அதிகாரியை அரசியல் உள்நோக்கம் கொண்ட செயலுக்கு உட்படுத்துவது, அதன் நேர்மை, நோக்கம்



மற்றும் அரச அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வது குறித்த கடுமையான கவலைகளை ஏற்படுத்துகிறது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(எ)

# போதைப்பொருட்கள் ஒழிப்பு: 44, 806 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, பெப். 27

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளின் கீழ் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 44, 806 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசோக தர்மசேன தெரிவித்தார்.

கொழும்பு, பத்தரமுல்லை பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட முப் படையினரும் இணைந்து நாட்டில் போதைப்பொருள் கடத்தலை முற்றாக ஒழிக்கும் நோக்குடனும், அதன் பயன் பாட்டைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் இந்த விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது 221 கிலோ கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் 14,761 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 223 கிலோ கிராம் "ஐஸ்" போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் 16,490 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், 108 கிலோ கிராம் குஷ், 81 கிலோ கிராம் கஞ்சா மற்றும் 8,34,000 அதிகமான போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டன.- என்றார்.

(எ)

# இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்


யாழ்ப்பானம், பெப். 27

யாழ். நீரிழிவுக் கழகமும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து நடத்தும் இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை மருதனார்மடம் சந்தையில் நடைபெறும்.

சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.ரவிராஜ் இதனை ஆரம்பித்து வைப்பார்.

இந்த முகாமில் நீரிழிவு பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை, உடற் திணிவுச் சுட்டி என்பன இடம்பெறு வதுடன் வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்படும். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். தடைகள் உடைபடும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். சிறப்பான நாள்.

**கன்னி**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் வரும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். நன்றி மறந்த சொந்த பந்தங்களை நினைத்து வருத்தப்படுவீர்கள்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்களை வாங்குவீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். தன்னம்பிக்கையான நாள்.

**மகரம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். அமோகமான நாள்.

**கும்பம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு.

**மீனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள்.

# ஜனாதிபதி நிதியம் மூலம் நன்மையடைய வேண்டும்

### யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்



யாழ்ப்பாணம், பெப். 27

ஜனாதிபதி நிதியம் மூலம் பொதுமக்கள் நன்மையடைய வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் நிதி உதவிகள் தொடர்பான தெளிவூட்டல் கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், யாழ். மாவட்டத்திலிருந்து குறைந்த அளவான விண்ணப்ப படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஜனாதிபதி நிதியத்தின் மூலம் பொதுமக்கள் நன்மையடைய வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும். இது தொடர்பில் கிராம உத்தியோகத்தர்கள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வுகளை வழங்க வேண்டும்- என்றார்.(எ)

## சமூக சக்தியென்பது கட்சியை வலுப்படுத்தும் ஆயுதம் அல்ல!

### அமைச்சர் சந்திரசேகர் விளக்கம்



கிளிநொச்சி, பெப். 27

"சமூக சக்தியென்பது கட்சியை வலுப்படுத்தும் அரசியல் ஆயுதம் அல்ல. அது வறுமையை ஒழிப்பதற்குரிய கூர்மையான ஆயுதமாகும்."- இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

எனவே, எல்லா விடயங்களிலும் எதிர்ப்பு அரசியல் நடத்தாமல், வறுமை ஒழிப்பு உள்ளிட்ட விடயங்களில் இணைந்து பணியாற்ற முன்வருமாறு அவர் அழைப்பு விடுத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது காலாண்டு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

## யாழ். அரச அதிபருடன் வேல்ட் விசன் நிறுவன பிரதிநிதிகள் சந்திப்பு



யாழ்ப்பாணம், பெப். 27

வேல்ட் விசன் நிறுவனத்தின் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனுடன் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் "Together We Rise" எனும் பெயரில் ஆரம்பிக்கப்படவுள்ள 3 வருடங்களுக்கான திட்டத்துக்கான சமூக பாதுகாப்பு அமைப்புகளின் மேம்பாட்டுத் திறன் தொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடலாக இது அமைந்தது. (எ)

## வடக்கு, மேல் மாகாணங்களில் சீரான வானிலை நிலவக்கூடும்

கொழும்பு, பெப். 27

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சீரான வானிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதன்படி, வடக்கு மற்றும் மேல் மாகாணங்களில் சீரான வானிலை நிலவக்கூடும்.

மேல் மாகாணத்தின் கடலோரப் பகுதிகளில், காலை வேளையில் சில இடங்களில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் நிலவுகிறது.

தென் மாகாணத்திலும், இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் சில இடங்களில், பிற்பகல் 02. 00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் நிலவுகிறது.

இதேநேரம் மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை, மொனராகலை, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனியுடனான வானிலை எதிர்பார்க்கப்படுகிறது.

## 30 விவசாயிகளுக்கு நிலக்கடலை விதை!




மன்னார், பெப். 27

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் வீசிய புயலால் வாழ்வாதாரத்தை இழந்த 30 விவசாயிகளுக்கு, மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டன.

மன்னார் பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனையின் பயிற்சி மண்டபத்தில் நேற்று முன் தினம் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிறாடோ தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

விதைகள் வழங்கும் நிகழ்விற்கு முன்னதாக, விவசாயிகளுக்குத் தெளிவான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கும் நோக்கில் விசேட பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

மன்னார் மாவட்ட விவசாய பாடவிதான உத்தியோகத்தர் ஜெஸ்மன் மார்க் பயிற்சிகளை வழங்கினார்.பயிற்சியின் நிறைவில் தெரிவு செய்யப்பட்ட 30 பயனாளிகளுக்கும் நிலக்கடலை விதைகள் கையளிக்கப்பட்டன. (அ)

## சி-4 வெடிமருந்துடன் கைதானார் இளைஞர்!

முல்லைத்தீவு, பெப். 27

முல்லைத்தீவு - கள்ளப்பாடு பகுதியில் சி-4 வகை வெடிமருந்தை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 26 வயதுடைய இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கள்ளப்பாடு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர் கள்ளப்பாடு தெற்கு பகுதியை சேர்ந்தவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து சுமார் 2 கிலோ 700 கிராம் அளவுடைய சி-4 வெடிமருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் மேலதிக விசாரணைகளுக்காக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 2,200 மில்லியன் நஷ்டத்துக்கு ரூ. 392 மில்லியன் தண்டப்பணம்

## அரசாங்கம் மீது ஐ. ம. ச. குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 27

இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைவான நிலக்கரியால் 2200 மில்லியன் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் தண்டப்பணமாக 392 மில்லியன் மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய நஷ்டத்தையே மின் கட்டணத்தின் ஊடாக மக்கள் மீது சுமத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் குற்றம்சாட்டியுள் ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி 5,900 - 6,150 கிலோ கலரிக்கு இடையில் காணப்பட்டதால் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாகவும், எனவே இந்த சுமை மக்கள் மீது சுமத்தப்படாது என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது கப்பலால் ஏற்பட்டுள்ள நஷ்டம் 288.5 மில்லியன் ரூபாயாகும். ஆனால், தண்டப்பணமாக 135.1 மில்லியன் ரூபாய் மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது. அதே போன்று, மூன்றாவது கப்பலால் 1047. 4 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ள நிலையில், 150.3 மில்லியன் ரூபாய் தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது.

நான்காவது கப்பலால் 865 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ள நிலையில், 107. 1 மில்லியன் ரூபாய் தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது. முதல் நான்கு கப்பல்களால் 2,200 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால், தண்டப்பணமாக 392 மில்லியன் ரூபாய் மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது.- என்றார். (எ)

# கொழும்பு மாவட்ட காணி மதிப்பில் தொடரும் ஏற்றம்

## 10. 6 சதவீதம் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 27

கொழும்பு மாவட்டத்துக்காக தயாரிக்கப்பட்ட காணி மதிப்பீட்டுச் சுட்டெண், தனது அதிகரிப்புப் போக்கைத் தொடர்ச்சியாகப் பேணியவாறு, 2024ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டுடன் ஒப்பிடுகையில் 2025ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் 10.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது.

இந்த வளர்ச்சியானது, காணி மதிப்பீட்டுச் சுட்டெண்ணின் உப சுட்டெண்களான வதிவிடம், வர்த்தகம் மற்றும் கைத்தொழில் ஆகிய மூன்று உப சுட்டெண்களிலும் பிரதிபலித்துள்ளதுடன், அவை முறையே 12.4 சதவீதம், 11.3 சதவீதம் மற்றும் 8.0 சதவீதம் வருடாந்த அதிகரிப்பை பதிவு செய்துள்ளன.

இதேவேளை, 2025ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் பதிவான பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் 2025ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில், காணி மதிப்பீட்டுச் சுட்டெண் மற்றும் அதன் உப சுட்டெண்கள் அரையாண்டு அடிப்படையில் மிதமான வேகத்தில் வளர்ச்சியடைந்துள்ளன.

இதில் வர்த்தக மற்றும் வதிவிட உப சுட்டெண்கள் உயர்ந்த வளர்ச்சி வேகத்தை காட்டியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கைவிடப்பட்ட படகில் இளம் பெண்ணின் சடலம்

கொழும்பு, பெப். 27

கொழும்பு - கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை கடற்கரைப் பகுதியில் கைவிடப்பட்டிருந்த மீன்பிடி படகு ஒன்றிலிருந்து இளம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

உயிரிழந்தவர் இரத்மலானை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த பெண்ணின் மரணம் சந்தேகத்துக்குரியது என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்த நிலையில், கல்கிஸ்ஸை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(எ)

# கடலில் நீராடச் சென்ற அவுஸ்திரேலிய பிரஜை நீரில் மூழ்கி உயிரிழப்பு

மாத்தறை, பெப். 27

மாத்தறை - வெலிகமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெலேன பகுதியில், கடலில் நீராடச் சென்ற வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மதியம் இந்த சம்பவம் பதிவானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் 76 வயது அவுஸ்திரேலிய நாட்டு பிரஜை என்று தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் தனது மனைவியுடன் பெலேன கடலில் நீராடிக்கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் நேர்ந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.(எ)

# கோடரியால் வெட்டிக்கொலை! ஒருவர் பொலிஸாரால் கைது

கம்பஹா, பெப். 27

கம்பஹா - மல்வத்துஹிரிபிட்டிய பகுதியில் கோடரியால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் பண்டாரகம பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

இருவருக்கிடையே ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக, சந்தேகநபர் தனது வீட்டிலேயே மற்றுமொரு அறையில் உறங்கிக் கொண்டிருந்தவரை கோடரியால் தாக்கி கொலை செய்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# குப்பை மேட்டில் தீப்பரவல்

கொழும்பு, பெப். 27

கெரவலப்பிட்டிய அதிவேக வீதி நுழைவாயிலுக்கு அருகில் நேற்றுக்காலை தீப்பரவலொன்று ஏற்பட்டுள்ளது.

அப்பகுதியில் அமைந்துள்ள குப்பை மேடொன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட் டுள்ளது.

தீயை கட்டுப்படுத்துவதற்காக இரண்டு தீயணைப்பு வாகனங்கள் அந்த இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.(எ)

# மோட்டார் சைக்கிள் திருட்டு! இரு சந்தேகநபர்கள் கைது

நீர்கொழும்பு, பெப். 27

நீர்கொழும்பு பகுதியில் இடம்பெற்ற தொடர் மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த பல மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசேட விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இதற்கமைய, நேற்று முன்தினம் புதன்கிழமை காலை மினுவாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெலிச - வெலிஹேன வீதியிலும், முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட் பட்ட அங்கொடை பகுதியிலும் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்த இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து திருடப்பட்ட 02 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவர்கள் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த எரிவாயு சிலிண்டர்கள் மீட்பு

நுவரெலியா, பெப். 27

நோர்வூட்டில் வீட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களை அதிக விலைக்கு விற்ற எரிவாயு விற்பனை முகவருக்கு எதிராக ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுவரெலியா மாவட்ட நுகர்வோர் சேவைகள் அதிகார சபையின் தலைமை விசாரணை அதிகாரி ரவீந்திர ஹதுஹின்ன தெரிவித்தார்.

நோர்வூட்டில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் பதுக்கி வைக்கப்பட்டு அதிக விலைக்கு விற்கப்படுவதாக நுவரெலியா மாவட்ட நுகர்வோர் சேவைகள் அதிகார சபைக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, 12.5 கிலோகிராம் எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றை 4,000 ரூபாய்க்கு விற்றது கண்டறியப்பட்டது.

நுவரெலியா மாவட்ட நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் உள்ளிட்டோர் முன்னெடுத்த சுற்றிவளைப்பில், கடையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வீட்டு எரிவாயு சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டதை தொடர்ந்து, இது தொடர்பில் நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.-என்றார். (எ)

# மின் கம்பத்துடன் மோதிய மோ. சைக்கிள்: இளைஞன் பலி

கல்முனை, பெப். 27

அம்பாறை - உஹன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாறை - கண்டி வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை மதியம் இந்த விபத்து இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி, மின் கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து நேர்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், சிகிச்சைகளுக்காக அம்பாறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் 22 வயதுடைய இளைஞன் என தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உஹன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கிராமிய குளங்களில் முதலைகள் நடமாட்டம்



மட்டக்களப்பு, பெப். 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வந்த வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை வீழ்ச்சி ஓய்ந்திருக்கின்ற நிலையில் கிராமியக் குளங்களில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப் பற்று பிரதேசத்திலுள்ள வெல்லாவெளி, கோவில்போரதீவு, பொறுகாமம் ஆகிய பல பகுதிகளில் காணப்படும் கிராமியக் குளங்களில் முதலைகளின் நடமாட்டம் காணப்படுகின்றது.

கடந்த காலங்களிலும் இக்குளங்களில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்பட்டதனால் மேய்ச்சலுக்குச் சென்ற ஆடு, மாடுகளை முதலைகள் வேட்டையாடிய சம்பவங்களும் பதிவாகின. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு அப்பகுதிக்கு ஆடு, மாடுகளை மேய்ப்பதற்காகச் செல்பவர்களும், தமது கால்நடைகள் விடயத்திலும் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு அப்பகுதி சமூக ஆர்வலர்கள் கூறினர்.(எ)

## கிண்ணியா நகர சபைக்கான பத்தாண்டு திட்டம் ஆரம்பம்

திருகோணமலை, பெப். 27

அரசின் பத்தாண்டு திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்ட திருகோணமலை-கிண்ணியா நகர சபைக்கான திட்டத் தயாரிப்புக்கான அங்குரார்ப்பணக் கூட்டம் கிண்ணியா நகர சபையின் தவிசாளர் மஹ்தி தலைமையில் நகர சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், பிரதம விருந்தினராக தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன,

கௌரவ விருந்தினராக கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் எம். அஸ்மி, விசேட விருந்தினர்களாக முதலமைச்சரின் செயலாளர், பிரதித் தவிசாளர், திணைக்களத் தலைவர்கள், சமூக நிறுவனத் தலைவர்கள் எனப் பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர். (எ)

# குடாகம வனப்பகுதியில் விஷமிகளால் தீ வைப்பு

நுவரெலியா, பெப். 27

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாகம ரயில் பாதைக்கு அருகாமையிலுள்ள வன பாதுகாப்புப் பகுதிக்கு, நேற்று முன்தினம் மாலை இனந்தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீப்பரவல் காரணமாக பல ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையானதாக பிரதேசவாசிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தத் தீ விபத்து காரணமாக இலங்கைக்கே உரித்தான அரிய வகை தாவரங்கள், மூலிகைச் செடிகள் மற்றும் சிறிய வகை உயிரினங்கள் அழிந்து போயிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மேலும், வறட்சிக் காலங்களில் காடுகளுக்குத் தீ வைக்கப்படுவதால் நீரூற்றுகள் வற்றிப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது வரும் காலங்களில் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு வழிவகுக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

காடுகள் அழிவதனால் சிறுத்தைகள், காட்டுப்பன்றிகள் உள்ளிட்ட விலங்குகள் உணவு தேடி மனிதர்கள் வாழும் குடியிருப்புகளை நோக்கி வரக்கூடும்.

விலங்குகளை வேட்டையாடுவதற்காக அல்லது பொழுதுபோக்குக்காக சமூக விரோதிகள் இவ்வாறான தீ வைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம் எனப் பாதுகாப்புப் பிரிவினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இயற்கையை அழிக்கும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களை உடனடியாக கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# தென்கிழக்கு பல்கலை. ஊழியர்கள் போராட்டம்

அம்பாறை, பெப். 27

அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவின் கடந்த 21 மற்றும் 22 ஆம் திகதி ஆகிய தினங்களில் நடைபெற்ற இணையவழி கலந்துரையாடல்களில் எட்டப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில், தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மதிய உணவு இடைவேளையில் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பெருமளவான ஊழியர்கள் கலந்து கொண்டு, தங்களது நீண்டநாள் கோரிக்கைகளை முன்வைத்து பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்தின் போது, பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளம், கொடுப்பனவுகள், ஓய்வூதிய நலன்கள் மற்றும் நியமன நடைமுறைகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் உடனடி தீர்வுகளை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. (எ)

# வறுமை ஒழிப்பு பிரஜா சக்தி 2026: 430 பேருக்கு காசோலை வழங்கல்

அம்பாறை, பெப். 27

வறுமை ஒழிப்பு பிரஜாசக்தி 2026 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்டத்தில் உள்ள 503 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 430 பயனாளிகளுக்கான வீடுகளுக்கு முதற்கட்ட காசோலைகள் வழங்கும் நிகழ்வு அம்பாறை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா மற்றும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள ரத்நாயக்க, பிரியந்த விஜேரத்ன ஆகியோருடன் அம்பாறை மாவட்ட செயலாளர் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டு காசோலைகளை வழங்கினர்.(எ)



# “பரிசோதகரின் அறிவுறுத்தல்களை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்”

திருகோணமலை, பெப். 27

இறைச்சிக்காக மாடு அறுப்பவர்கள் பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தல்களை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் இதனை மீறிச் செயல்படும் கடை உரிமையாளர்களின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படுவதுடன், பிணைப் பணமும் சபையால் அறவிடப்படும் என்றும் திருகோணமலை- குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார்.

குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்களுடனான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் குச்சவெளி பிரதேச சபையிலும், புல்மோட்டை உப அலுவலகத்திலும் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவரின் அடிப்படைத் தேவைக்காக மாதம் குறைந்தது ரூ.16,730 வேண்டும்!

கொழும்பு, பெப். 27
மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத்துறை 2026 ஜனவரி மாதத்துக்கான அதிகார பூர்வ வறுமைக் கோட்டுத் தகவல்களை வெளியிட்டுள்ளது. அதன்படி, ஒருவருக்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய மாதத்திற்கு குறைந்தது ரூ. 16,730 தேவைப்படுகிறது.

தரவுகளின்படி, மாதாந்த அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய அதிக செலவு கொழும்பு மாவட்டத்தில் 18,044 ரூபாவாக பதிவாகியுள்ளது. குறைந்த செலவு மொனராகலை மாவட்டத்தில் 15,997 ரூபாவாக உள்ளது.

வறுமைக் கோடு என்பது ஒருவரின் அடிப்படை உணவு மற்றும் உணவல்லாத தேவைகளை பூர்த்தி செய்யத் தேவையான குறைந்தபட்ச செலவைக் குறிக்கிறது. வாழ்வாதாரச் செலவு மற்றும் பணவீக்க மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் இது மாதந்தோறும் திருத்தப்படுகிறது.

இந்த அதிகாரபூர்வ வறுமைக் கோடு 2012ஃ2013 குடும்ப வருமான மற்றும் செலவுக் கணக்கெடுப்பு தரவுகளை அடிப்படையாகக் கொண்டு புதுப்பிக்கப்பட்டதாக புள்ளிவிவரத்துறை தெரிவித்துள்ளது. (அ)

## ஈஸ்டர்...

தெரிகிறது. இது குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுக்கும் சுதந்திரமான விசாரணை. எனவே, இதனை அரசியல் மயமாக்காமல் விசாரணைகளை அதன் போக்கில் முன்னெடுக்க இடமளிக்கவேண்டும்.

விசாரணைகளைக் குழப்ப முயற்சிப்பதானது, இத்தாக்குதலில் உயிரிழந்த மற்றும் அங்கவீனமுற்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும் மக்கள் அனைவரும் பொறுமையுடன் காத்திருந்து உண்மைகள் வெளிவர ஒத்துழைக்கவேண்டும்.புலனாய்வுப் பிரிவினர் தமது பணிகளைச் சுதந்திரமாக முன்னெடுக்க அனைவரும் இடமளிக்க வேண்டும் - என்றார். (அ)

## டித்வா...

காணிகளை அடையாளம் காணுமாறு அறிவுறுத்தப்பட்டது. தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் முறையான பரிசோதனை மற்றும் பரிந்துரைகளுக்கு அமையவே புதிய வீடமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகைகள் மற்றும் கொடுப்பனவுகளைத் தாமதமின்றி வழங்கவும், இதுவரை கொடுப்பனவு கிடைக்காதவர்களின் மேன்முறையீடுகள் குறித்து விசேட கவனம் செலுத்தவும் உத்தரவிடப்பட்டது.

வீட்டுத் திட்டப் பணிகளைத் துரிதப்படுத்துவது தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் விசேட கலந்துரையாடலை நடத்தவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.(அ)

## இலங்கையின்...

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல்" எனும் தீர்மானம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது.

இதன்படி, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கின் எழுத்துமூல அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் (63ஆவது கூட்டத்தொடர்) சமர்ப்பிக்கப்படும். அத்துடன், விரிவான அறிக்கை அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் (66ஆவது கூட்டத்தொடர்) சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதன் காரணமாகவே, எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள தற்போதைய 61ஆவது கூட்டத்தொடரின் உத்தியோகபூர்வ நிகழ்ச்சி நிரலில் இலங்கை குறித்த விவாதங்கள் உள்வாங்கப்படவில்லை.

உத்தியோகபூர்வ விவாதங்கள் இல்லாவிட்டாலும், ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சுமித் தஸநாயக்க தலைமையிலான குழுவினர் இக்கூட்டத்தொடரில் பங்கேற்றுள்ளனர்.

ஏனைய நாடுகளின் விவகாரங்கள் குறித்த பொது விவாதங்களின்போது, அவர்கள் இலங்கை சார்பில் தமது கருத்துக்களை முன்வைக்க உள்ளனர்.

நாளை நடைபெறவுள்ள பக்க நிகழ்வில் இலங்கையின் தற்போதைய மனித உரிமைச் சூழல், பொறுப்புக்கூறல் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி போன்ற விடயங்கள் விரிவாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## இடர் நிவாரண...

தொழிற்சங்க நடவடிக்கையொன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளன.

அதற்கமைய, அகில இலங்கை அனர்த்த நிவாரண சேவைகள் தொழிற்சங்கம், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கம் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கம் ஆகியவை இணைந்து விடுத்துள்ள கூட்டறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டித்வா புயலினால் ஏற்பட்ட பாரிய அனர்த்தம் நிகழ்ந்து 93 நாட்கள் கடந்துள்ள நிலையில், அக்காலப்பகுதி முழுவதும் அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்களும் கிராம உத்தியோகத்தர்களும் இரவு பகல் பாராது தொடர்ச்சியாக சேவையாற்றி, அரசாங்கத்திற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையிலான பிரதான இணைப்பாளர்களாகச் செயற்பட்டுள்ளதாக அத்தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மேலும், அனர்த்தப் பணிகளுடன் தொடர்புடைய நட்டஈடு மற்றும் மீளளிப்புக் கொடுப்பனவுகளுக்கான மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கள மட்டத்தில் விசேட பங்களிப்பை வழங்கி வருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாங்கள் ஆற்றியுள்ள இந்த அர்ப்பணிப்பான சேவைக்கு ஒப்பான தற்போதைய பிரச்னைகள் குறித்து அரசாங்கம் போதிய கவனம் செலுத்தாமை காரணமாகவே இவ்வாறானதொரு கூட்டுத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்ததாக அத்தொழிற்சங்கங்கள் மேலும் வலியுறுத்துகின்றன. (அ)

## எந்தவொரு...

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் தேவையில்லை எனவும் சாவகச்சேரி நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகராட்சி மன்றின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் தவிசாளர் வ.சிறீபிரகாஸ் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது உபதவிசாளர் ஞா.கிஷோர் புதிய பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பான பிரேரணையினை சபையில் முன்வைத்து உரையாற்றினார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சபை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படாத குறித்த விடயத்தினை சபையில் பிரேரிக்க முடியாது என தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

எனினும் தேசிய மக்கள் சக்தியின் 3 உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களின் ஆதரவோடு பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (அ)

## 293 குடும்பங்களின்...

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் ப.உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கடந்த கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட வனவளத்திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்கள் மற்றும் காணிகளின் விடுவிப்பு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம்,

செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீரமாணிக்கங்குளம், முசல்குத்திக்குளம் ஆகிய கிராமங்களில் 1977 ஆம் ஆண்டு மக்கள் குடியமர்த்தப்பட்டனர். பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து சென்ற மக்கள் மீண்டும் திரும்பி வந்து மீளக்குடியமரச் சென்ற நிலையில் அதற்கு வனவள திணைக்களம் தடை ஏற்படுத்தியுள்ளது. இதற்கான முடிவை இன்று எடுக்கவேண்டும் என தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த செட்டிகுளம் பிரதேச செயலாளர்-

குறித்த கிராமத்தில் வாழ்ந்தவர்கள் என 293 குடும்பங்கள் அங்கு மீளக்குடியமர்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளன. அவர்களில் பலர் காணிக்குரிய ஆவணங்களையும் வைத்துள்ளனர். அந்தவகையில் மொத்தமாக 672 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு நாம் கோரியிருந்தோம். அந்த காணிகளுக்குள் இடிந்த நிலையில் கிணறுகள் உள்ளன. பழைய பாடசாலைகள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. இடிந்த கட்டடங்கள் உள்ளன. இந்த காணிகளை விடுவிக்க முடியும் என தெரிவித்திருந்த வனவளத்திணைக்களம் கடந்த 2024 ஆம் ஆண்டு அவற்றை வர்த்தமானி அறிவிப்பு செய்து கையகப்படுத்தியுள்ளது-என்றார்.

பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தரினதும், குடியேற்ற உத்தியோகத்தரினதும் பங்களிப்புடனேயே இந்த வர்த்தமானி அறிவிப்பு செய்துள்ளதாக வனவளத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

எனினும் அவ்வாறு இடம்பெறவில்லை என பிரதேச செயலாளர் மறுத்திருந்ததுடன் எமக்கு எந்த ஒரு விடயமும் தெரியப்படுத்தப்படவில்லை என கூறினார்.

இதனையடுத்து குறித்த காணி தொடர்பில் செட்டிகுளம் பிரதேச செயலாளர், வனவளத்திணைக்கள அதிகாரிகள் இணைந்து பிறிதொரு நாளில் கலந்துரையாடி முடிவை எடுக்குமாறு ஒருங்கிணைப்பு குழுவால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்,

வனவளத்திணைக்களம் தொடர்பாக இங்கு கதைப்பதில் எந்தவித பிரயோசனமும் இல்லை. கதைக்கின்ற எவையும் நடைபெறுவதில்லை என்று விசனம் தெரிவித்தார்.(அ)

## ஊழல்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தரமற்ற நிலக்கரியால் நுரைச்சோலை மின்நிலைய உற்பத்தி குறைந்துள்ளது. இதனை ஈடு செய்ய டீசல் மின்நிலையங்களைப் பயன்படுத்துவதால் நாட்டுக்கு சுமார் 3,026 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த நட்டத்தை ஈடு செய்ய மார்ச் மாதம் முதல் மின்சாரக் கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதிகாரிகளின் தவறுக்கு அப்பாவி மக்கள் ஏன் தண்டப்பணம் செலுத்த வேண்டும்.

அரசாங்கத்தின் ஊழல்கள் மற்றும் தோல்விகளை மறைக்கவே, முன்னாள் புலனாய்வுப் பிரிவு பிரதானியை அரசாங்கம் தற்போது கைது செய்துள்ளது.

2025 ஏப்ரல் 21 இன் உண்மையான சூத்திரதாரியைப் பிடிப்பதாக ஜனாதிபதி அநுர குமார வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இப்போது மக்களின் கவனத்தை திசைதிருப்ப இந்த கைதுகள் ஒரு "ஊடக நாடகமாக" அரங்கேற்றப்படுகின்றன - என்றார். (அ)

## போதைப்பொருள்...

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொலிஸ் சேவைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதை நாம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறோம் அதன் ஒரு பெறுபேறாக பொலிஸ் நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள், புதிய பொலிஸ் நிலையங்களை அமைத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

இதற்கு மேலதிகமாக, 10000 புதிய நியமனங்களை வழங்கும் நடவடிக்கைகள் இந்த வருடத்திற்குள் நிறைவு செய்யப்படும். இதன் மூலம் பொலிஸ் திணைக்களத்திற்குத் தேவையான மனித வளத்தை பெற்றுக்கொடுப்பதோடு, தற்போதுள்ள மனித வளத்தை மிகவும் வினைத்திறனான முறையில் முகாமைத்துவம் செய்வதும் அவசியமாகிறது.

தற்போது நாம் குற்றக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தி வருகிறோம். பொதுமக்கள் தொடர்புகளை மேம்படுத்தும் அதேவேளையில், குற்றக் கட்டுப்பாடு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்காகப் பெருமளவிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஒட்டுமொத்த பொலிஸ் சேவையும் இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது-என்றார். (அ)

## யாழ்.பல்கலை...

மார்ச் 25ஆம் திகதி தொடக்கம் துணைவேந்தராகக் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். அண்மையில் இடம்பெற்ற துணைவேந்தருக்கான தேர்தலில் அதிக புள்ளிகளை பெற்று முதன்மை நிலையை பேராசிரியர் வேல்நம்பி பெற்றிருந்தார்.

சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி வலிகாமம் கிழக்கு புத்தூரைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## கச்சதீவு...

வெள்ளிக்கிழமை அதிகாலை நான்கு மணியிலிருந்து பகல் ஒரு மணி வரை யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திலிருந்து குறிகாட்டுவான் இறங்குதுறை நோக்கிய பஸ் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து படகுச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. திருவிழாவுக்கு செல்ல விரும்புகின்றவர்கள் குறிகாட்டுவான் இறங்குதுறையில் தங்கள் அடையாள அட்டையை காட்டி பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். வேறு எங்கும் அந்தப் பதிவுகளைச் செய்ய வேண்டிய அவசியமில்லை.

அதேவேளை யாத்திரியர்கள் இன்று வெள்ளிக்கிழமைக்கு தேவையான உணவுகளைக் கொண்டு செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை இரவு உணவு அங்கே வழங்கப்படமாட்டாது. ஆனால் நாளை சனிக்கிழமை காலை திருநாள் திருப்பலி முடிந்த பிற்பாடு காலை உணவு யாத்திரியர்கள் எல்லாருக்கும் வழங்கப்படும்.

அதேவேளை படகு சேவையின் ஒரு வழிக் கட்டணமாக 1,200 ரூபாய் அறவிடப்படும். அங்கு செல்வோர் தேவையான குடிதண்ணீரையும் கொண்டு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை திகதி பகல் ஒரு மணிக்குப் பின்னர் படகு சேவைகள் இடம்பெறமாட்டாது

அத்துடன் இந்த வருடம் இந்தியாவின் சிவகங்கை மறைமாவட்ட குரு முதல்வர் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட குருக்கள், துறவிகள் கச்சதீவுக்கு வருகின்றார்கள். இலங்கையிலிருந்தும் யாழ். மறைமாவட்ட குருமுதல்வருடன் ஐம்பதுக்கு மேற்பட்ட குருக்கள், துறவிகள் இந்தத் திருநாளில் பங்கு பெற இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நாமலை நேருக்கு நேர் எதிர்கொள்ள தைரியமில்லாத தமிழ் மாணவர்கள்!

## சாடுகின்றார் சரத் வீரசேகர

கொழும்பு, பெப். 27

நாமலை நேருக்கு நேர் சந்தித்து கேள்வி கேட்கும் தைரியம் தமிழ் மாணவர் அமைப்புகளுக்கு இல்லை எனவும், அவரது ஆளுமையைக் கண்டு அவர்கள் அஞ்சுவதாகவும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் உரை நிகழ்த்த நாமல் ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் தமிழ் மாணவர் அமைப்புகளின் அழுத்தத்தால் அது இரத்து செய்யப்பட்டுள்ளது.

பேச்சு சுதந்திரம் மற்றும் விவாத சுதந்திரத்தைப் போற்றும் இந்தப் பல்கலைக்கழகங்கள், பிரிவினைவாத தமிழ் மாணவர் அமைப்புகளுக்கு பணிந்து அந்த கலாசாரத்தையே காட்டிக்கொடுத்துள்ளன

நாமல் ராஜபக்சவின் ஆளுமைக்கு முன்னால் முதுகெலும்பை நிமிர்த்தி நின்று கேள்வி கேட்க முடியாத தமிழ் மாணவர் சங்கங்களே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்த அரசாங்கம் புலம்பெயர் தமிழ் அமைப்புகளை திருப்திப்படுத்தவே செயற்படுகிறது. அதனால்தான் ஜனாதிபதி "ரணவிரு" (இராணுவ வீரர்) என்ற வார்த்தையைப் பயன்படுத்தக்கூட அஞ்சுகின்றார். சுதந்திர தினத்தில் இராணுவக் கருவிகளைக் காட்சிப்படுத்தாததும் இவர்களைத் திருப்திப்படுத்துதற்காகவே ஆகும்.



2010 இல் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இவ்வாறே எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. உலகின் மிகக் கொடிய பயங்கரவாதத்தை தோற்கடித்து, ஈழக் கனவைத் தகர்த்ததால் ராஜபக்ஷ குடும்பத்தின் மீது அவர்கள் தீராத கோபத்தில் உள்ளனர்.

தமிழ் மாணவர் சங்கங்கள் நாமல் ராஜபக்சவிடம் கேள்வி கேட்க தைரியம் இல்லாமல் போனது குறித்து வெட்கப்பட வேண்டும் - என்றார். (அ)

# சுரேஷ் சாலேயின் கைபேசிகள், ஈமெயில் வங்கி கணக்குகளை ஆராயத் தீர்மானம்!

கொழும்பு, பெப். 27

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே பயன்படுத்திய கணினிகள், கையடக்கத் தொலைபேசிகள், மின்னஞ்சல் தகவல்கள் மற்றும் அவரது வங்கிக் கணக்குகளை விரிவாக ஆய்வு செய்யப் புலனாய்வாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

2019 ஏப்ரல் 21 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்குச் சதி செய்தமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொடை பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு நேற்று முன் தினம் காலை சுரேஷ் சாலே பணிக்குச் சென்று கொண்டிருந்தபோதே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட அதிகாரிகள் குழு அவரை கைது செய்தது. (அ)

# நான்கு மாதங்களில் 1 லட்சம் பேர் கைது!

கொழும்பு, பெப். 27

இலங்கையில் போதைப்பொருள் ஒழிப்புக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் கீழ், கடந்த நான்கு மாதங்களில் மாத்திரம் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு.வூட்லர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த நான்கு மாதங்களாக போதைப்பொருள் ஒழிப்புச் செயற்றிட்டம் மிகவும் ஆக்கபூர்வமான முறையில் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இக்காலப்பகுதியில் 15 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களில் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 900 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 2 ஆயிரத்து 400 பேருக்கு எதிராக நீதிமன்றங்கள் ஊடாகத் தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டிய சட்டவிரோத சொத்துக் குவிப்புத் தொடர்பில் 146 விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (அ)

# கிராம அலுவலர் போராட்ட எச்சரிக்கை; அவசர பேச்சுக்கு அழைத்தது அமைச்சு

கொழும்பு, பெப். 27

தர உயர்வுப் பிரச்னைக்குத் தீர்வு கோரி கிராம உத்தியோகத்தர்கள் முன்னெடுக்கவிருந்த போராட்டத்தைத் தொடர்ந்து, அவர்களுடன் அவசர கலந்துரையாடல் ஒன்றை நடத்த பொதுநிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

17 ஆண்டுகால தர உயர்வுப் பிரச்னைக்குத் தீர்வு கிடைக்காததால், எதிர்வரும் மார்ச் 03 ஆம் திகதி அமைதிப் போராட்டம் நடத்த 2009/2010 கிராம உத்தியோகத்தர் ஒன்றியம் திட்டமிட்டிருந்தது.

இந்த போராட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, இன்று அவசர பேச்சுவார்த்தைக்கு வருமாறு அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

2007-இல் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவாகி 2009/2010 ஆண்டுகளில் பணியில் இணைந்த 2,300 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் இந்தப் பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமது நியாயமான தொழில்சார் கோரிக்கை நிறைவேறும் வரை தொடர்ச்சியாக செயற்படப் போவதாக கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளது. (அ)

# இந்திய தூதுவரை சந்தித்தார் ரணில்!


கொழும்பு, பெப். 27

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கொழும்பு, பிளவர் வீதியில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒரே அணியின் கீழ் கொண்டு வருவது தொடர்பாக, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன் தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். இந்தப் பேச்சு முடிவடைந்தவுடனேயே இந்தியத் தூதுவர் அவரைச் சந்தித்தமை அரசியல் அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதிக்கும் இந்தியத் தூதுவருக்கும் இடையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்த உத்தியோகபூர்வத் தகவல்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. எனினும், தற்போதைய அரசியல் சூழல் மற்றும் இருதரப்பு உறவுகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)



# இந்திய போட்டிக்கு மத்தியிலும் கொழும்பு துறைமுகம் சாதனை

## ஜனவரி மாதத்தில் 14.9 வீத வளர்ச்சி

கொழும்பு, பெப். 27

இந்தியாவின் புதிய விழிஞ்ஞும் துறைமுகத்தின் சவால்களுக்கு மத்தியிலும், 2026ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கொழும்பு துறைமுகம் பாரிய வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

குறிப்பாக, அதன் பிரதான வருமான மார்க்கமான "மறுதவணை ஏற்றுமதி வர்த்தகம் 14.9 வீத வளர்ச்சியை எட்டியுள்ளது.

2026 ஜனவரி மாதத்தில் மாத்திரம் 604,173 கொள்கலன்கள் மறுதவணை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் கணிசமான உயர்வாகும். ஒட்டுமொத்த கொள்கலன் கையாளுகை 14.7 சதவீதத்தால் அதிகரித்து 754,730 ஆகப் பதிவாகியுள்ளது.

நாட்டின் பொருளாதார மீட்சியைக் காட்டும் வகையில், உள்நாட்டு ஏற்றுமதி கொள்கலன்களின் அளவு 17.2 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அதேவேளை, இறக்குமதி கொள்கலன்களின் அளவு 8.1 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் இந்த வெற்றிக்கு அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட மேற்கு சர்வ தேச முனையம் முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

இம்மாதத்தில் மட்டும் இந்த முனையம் 130,482 கொள்கலன்களைக் கையாண்டுள்ளது.

துறைமுகத்திற்கு வந்த கப்பல்களின் எண்ணிக்கை 2.8 வீதத்தால் குறைந்திருந்தாலும், கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பாரிய அளவிலான கொள்கலன் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தருவதையே இது காட்டுகிறது.

இந்தியாவின் கேரளாவில் அதானி குழுமத்தினால் ஆரம்பிக்கப்பட்ட விழிஞ்ஞும் சர்வதேச துறைமுகம், கொழும்புக்கு நேரடிப் போட்டியாக உருவெடுத்துள்ளது.

இந்தியாவின் 70 வீத மறுதவணை ஏற்றுமதி வர்த்தகம் கொழும்பு மூலமே நடைபெறுவதால், விழிஞ்ஞும் துறைமுகம் அதனைத் தன்வசம் ஈர்க்க முயற்சிக்கிறது.

இருப்பினும், செங்கடல் பகுதியில் நிலவும் பதற்றமான சூழல் மற்றும் கொழும்பு துறைமுகத்தின் வினைத்திறனான சேவை காரணமாக, சர்வதேச கப்பல் நிறுவனங்கள் தொடர்ந்து கொழும்பையே முதன்மை மையமாகத் தெரிவு செய்து வருகின்றன. (அ)

# அவசரகால சட்டத்துக்கு எதிரான இரு மனுக்கள் நேற்று தள்ளுபடி

கொழும்பு, பெப். 27

"டித்வா" சூறாவளி அனர்த்தத்தைத் தொடர்ந்து, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்ட ஒழுங்குவிதிகள் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே தள்ளுபடி செய்ய உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுக்கள் மீதான பரிசீலனை நேற்று மேற்கொள்ளப்பட்டது.

நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான மூவர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் இந்தத் தள்ளுபடி உத்தரவை பிறப்பித்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.